செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Insitution under Ministry of Education, Government of India, New Delhi)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113

பயிலரங்கம் - 4

## வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம்

# தமிழர் வாய்மொழி மரபுகளும் செம்மொழித் தமிழிலக்கியப் பதிவுகளும்

(16.09.2021 – 22.09.2021)

## அறிவிப்பும் அழைப்பும்

சமூக அமைப்புகளே இலக்கியத் தோற்றத்திற்கு அடித்தளமாக அமைகின்றன. இந்த அமைப்புகளுக்குள்ளிருக்கும் வாய்மொழி மரபுகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. மாந்தவினம் வேட்டையாடிய நிலையிலிருந்து வேளாண்மைத் தொழில் செய்யும் நிலைக்கு மாறிய பின்னர் வணிக நிலைக்கு வளர்ந்து முன்னேறியுள்ளது.

படிநிலை வளர்ச்சி பெற்றுவந்த மாந்தவினம் முதலில் தோன்றிய இடம் இலெமூரியா என்பது பாவாணரின் ஆய்வு முடிபாக இருந்தது. ஸ்காட் எலியட் (Scott-Elliot) குமரிக் கண்டமே முதல் மாந்தவினத்தின் தோற்றப் பகுதி என்று The Story of Atlantis and the Lost Lemuria என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மாந்தவினம் தோன்றிய வரலாறு பற்றிய ஆய்வுகளும் தொடர்ந்துகொண்டுதான் உள்ளன. பூம்புகாரில் நடத்தப்பெற்ற கடல் அகழாய்வுகளின் மூலம் அந்நகரின் காலம் கி.மு. பத்தாயிரம் ஆண்டுகள் பழமை உடையது என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாந்தவினம் தொடக்கநிலையில் வாய்மொழி மரபுகளையே கொண்டிருந்தன. அவ் வாய்மொழி மரபுகளைக் காலம் காலமாய் மாந்தவினம் கைக்கொண்டு வந்த நிலையில் அறிவு வளர்ச்சி பெற்ற பின்னர் ஏட்டிலக்கியங்களை வகுத்துக்கொண்டன. இந்த வளர்ச்சிநிலைக் காலத்தில் தோன்றிய தொல்காப்பியம், தமிழ்மொழியானது ‘வழக்கும் செய்யுளும்’ கொண்ட இரட்டைவழக்கு மொழி என்பதைக் குறிப்பிடுகின்றது.

உலகம் முழுவதும் இலக்கியத் தோற்றத்தின் தொடக்கநிலை வாய்மொழி மரபு வழிப்பட்டதாகவே இருந்திருக்கிறது. எழுத்தில் பதியும் மரபு ஏற்பட்ட பின்னர் வாய்மொழி மரபுகளின் தாக்கம் அதனுள் வந்து பதிந்தன. செய்யுள் இலக்கிய ஆக்கக்

கூறுகளாகிய உவமை, எதுகை, உருவகம், உள்ளுறை போன்றன வாய்மொழி மரபுகளிலிருந்தே கைக்கொள்ளப் பெற்றதாக ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். இந்தப் பின்னணியில் தமிழர்களின் வாய்மொழி, இலக்கிய மரபுகள் குறித்த ஆய்வுகளை வளர்த்தெடுக்க வேண்டிய தேவையுள்ளது.

தமிழரின் வேட்டை முறைமை, உணவுமுறை, மருத்துவம், அறிவியல், வேளாண்மை இவற்றை உள்ளடக்கிய வாய்மொழி மரபு பற்றிய வரலாறு, கலை மரபுகள் போன்றனவற்றை ஆய்வு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் இப்பயிலரங்கை நடத்துகிறது. பயிற்றுரை, கள ஆய்வு எனும் இரு வடிவில் இப்பயிலரங்கம் நடைபெறும். ஆய்வு மாணவர்கள் மட்டுமே இப்பயிலரங்கில் பங்கேற்க முடியும்.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். தமிழியல் ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

**பயிலரங்கின் விதிமுறைகளும், விவரங்களும் கீழ் வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 25
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 16.09.2021முதல் 22.09.2021வரை (தொடர்ந்து 7 நாள்கள்)
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து hsa@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி வழியாகத் தொடர்பு கொள்ளக்கூடாது.

8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பப்படுதல் வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டுமே பங்கேற்பு ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. பங்கேற்க அழைக்கப்படும் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் தங்கள் நெறியாளரிடமிருந்தும் துறைத் தலைவரிடமிருந்தும் ஒப்புதல் பெற்று வந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
12. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
13. விண்ணப்பம் வந்து சேரவேண்டிய இறுதி நாள் 11.09.2021. இதற்குப் பின்வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
14. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 13.09.2021அன்று மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.

நிழற்படம்

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

## வரலாறு, சமூகவியல் மற்றும் மானிடவியல் புலம்

## தமிழர் வாய்மொழி மரபுகளும் செம்மொழித் தமிழிலக்கியப் பதிவுகளும்
**(16.09.2021 – 22.09.2021)**

# விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள்/ வயது | | |
| 3. | பாலினம் | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | பொது [ ] இ.பி.வ. [ ] பட்டியல் இனத்தவர் [ ] | |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | ஆய்வியல் நிறைஞர் / முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |

நாள் :

இடம்:

(கையொப்பம்)

உரிய முத்திரையுடன்
துறைத் தலைவரின் மேலொப்பம்

உரிய முத்திரையுடன்
நெறியாளரின் கையொப்பம்